# துறையூர் நகராட்சி

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 30.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடத்தப்படும் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

இ.செல்வராணி 30/6/26

நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.06.2026 | 01 | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி வழக்கிற்கான விசாரணை 19.03.2026 அன்று மத்திய அரசின் தொழில் தீர்ப்பாயம் மற்றும் தொழிலாளர் நீதிமன்றத்தில் (CGIT-CUM-LCS) நடத்த விசாரணையில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனத்தால் கோரப்பட்ட தொகை ரூ.65,85,373/-ல் 25% செலுத்துமாறு ஆணையிட்டதை தொடர்ந்து, மேற்படி தொகையில் 25% ரூ.16,46,343/-ஐ தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், திருச்சி அவர்களுக்கு செலுத்தப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.4045/2012/சி1)**<br>**<u>அலுவலககுறிப்பு:</u>** அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண்:568 பதிவு செய்யப்பட்டது |
| 30.06.2026 | 02 | துறையூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-24ன் கீழ் விநாயகர் தெருவில் புதிதாக எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிநடைபெற்று முடிந்த நிலையில் மேற்படி பணிக்கு Consent to Operate (CTO) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து பெற Consultant ஆக பணிபுரிந்த K.புவனேஷ்வரன் என்பவரிடமிருந்து Consultancy Charges ரூ.30000/-க்கான பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கான Consultancy charge ரூ.30000/-யை K.புவனேஷ்வரன் என்ற பெயருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.3687/2023/இ1)**<br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ)மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:569 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 03 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய திரு.M.கண்ணன் வழக்கறிஞர் அவர்களுக்கு கட்டணமாக ரூ.30000/- வழங்ககோரி பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.30000/- யினை திரு.M.கண்ணன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.4045/2012/சி1)**<br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ)மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:570 அனுமதி வழங்கப்பட்டது |

Scanned with OKEN Scanner

30.06.2026 | 04

துறையூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணம் 2025–26ம் ஆண்டுக்கு கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விபரம்

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் ஜல்லி சாலை ரூ. (Earthern Road) | தார் சாலை ரூ. (BT Road) | சிமெண்ட் சாலை ரூ. (CC Road) |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2730 | 5745 | 6615 |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | 4215 | 7210 | 8100 |

எனவே அரசாணை (நிலை) எண்.34 நாள்.15.02.2010ன் படி 2026–27ஆம் ஆண்டிற்கு குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணத்தை தற்போதுள்ள கட்டணத்திலிருந்து 5% உயர்வு செய்து புதியகுடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்திட கீழ்காணும் விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் ஜல்லி சாலைக்கு (Earthern Road) ரூ. | தார் சாலைக்கு (BT Road) ரூ. | சிமெண்ட் சாலைக்கு (CC Road) ரூ. |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | 2870 | 6035 | 6945 |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | 4425 | 7570 | 8505 |

**(ந.க.எண்.1156/2018/இ2)**

**<u>அலுவலககுறிப்பு:–</u>**

1. சாலை சீரமைப்பு கட்டணம் 2025–26ம் ஆண்டு கட்டணத்திலிருந்து 5% உயர்வு செய்து 2026–27ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணத்தை 01.04.2026 முதல் வசூல் செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:571 அனுமதி வழங்கப்பட்டது

---

30.06.2026 | 05

துறையூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, திருச்சிரோடு, கதவு எண். 203 கொண்ட குடிநீர் கட்டண புதிய இணைப்பு எண். 087/014/900357 பழைய இணைப்பு எண்.087/1369 ஆனது ஸ்ரீ நடராஜா பேக்கரி என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி குடிநீர் இணைப்பு 2020–2021–I முதல் குடிநீர் குழாய் துண்டிக்கப்பட்டு நாளது தேதி வரை பயன்பாடின்றி உள்ளது. மேலும் மேற்கண்ட குடிநீர் இணைப்பு 2020–2021–I முதல் 2026–2027–IV வரை ரூ. 25620/– நிலுவையாக உள்ளது. எனவே, 2026–2027 நிதியாண்டில் நடப்பு கேட்பு பட்டியலில், குடிநீர் கட்டணம் வசூல் சதவீதம் அதிகரிக்கும் பொருட்டு, மேற்கண்ட குடிநீர் கட்டண இணைப்பு எண்ணை கணினியில் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.948/2024/அ1)**

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:572 ரத்து செய்யப்பட்டது

Scanned with OKEN Scanner

<table>
<tr>
<td>30.06.2026</td>
<td>06</td>
<td>

துறையூர் நகராட்சியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ்குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு பெறப்படும் குடிநீர் 1000 லிட்டருக்கு ரூ.17.26/- வீதம் பெறப்பட்டு பொதுமக்களுக்கு மாதந்தோறும் ரூ.80/-க்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் 9270 குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் கேட்பு தொகை ஆண்டுக்கு ரூ.8899200/- மட்டும் ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் ஆண்டுக்கு ரூ.33096168/- குடிநீர் பணிக்காக செலவிடப்பட்டுவருகிறது. இது குடிநீர் வருவாயைவிட குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தும் கட்டணம் கூடுதலாக செலவிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படும் குடிநீர்கட்டணம் உயர்வு செய்யப்பட்டு அரசாணை (G.O.MS.No.120 நாள்.22.08.2023 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் படி நகர் பகுதிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி குடிநீர் கட்டணம் நிர்ணயம்செய்து, நிர்வாகஇயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் கடித எண்.F31810/Tariff Revision/AEII/O&M/2017 நாள்.24.04.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><td>01.08.2023 முதல் 31.03.2024 முடிய குடிநீர் கட்டணம்<br><br>அடுத்த ஒவ்வொரு ஆண்டுக்கும் 5% உயர்வு செய்து</td><td>ரூ.16/1000 லிட்டர்</td></tr>
<tr><td>01.04.2024 முதல் 31.03.2025 முடிய குடிநீர் கட்டணம்</td><td>ரூ.16.80/1000 லிட்டர்</td></tr>
<tr><td>01.12.2025 முதல் 31.03.2026 முடிய குடிநீர் கட்டணம்</td><td>ரூ.17.64/1000 லிட்டர்</td></tr>
<tr><td>01.12.2026 முதல் 31.03.2027 முடிய குடிநீர் கட்டணம்</td><td>ரூ.18.52/1000 லிட்டர்</td></tr>
<tr><td>01.12.2027 முதல் 31.03.2028 முடிய குடிநீர் கட்டணம்<br><br>என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.</td><td>ரூ.19.45/1000 லிட்டர்</td></tr>
</table>

இது தற்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படும் குடிநீர் கட்டணத்தை விட இருமடங்கிற்கும் கூடுதலாக செலுத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்திற்கு செலுத்தப்படும் குடிநீர் கட்டண செலவுத்தொகையினை ஈடுசெய்யும் நோக்கிலும், குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதின் அவசியம் கருதியும், இந்நகராட்சி மூலம் வழங்கப்பட்டு வரும் குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர குடிநீர் கட்டணத்தொகையை கூடுதலாக வசூல் செய்தால் மட்டுமே குடிநீர் விநியோகத்தால் ஏற்படக்கூடிய செலவினத்தை ஈடுசெய்ய முடியும் என்ற நிலை உருவாகிறது. எனவே, மேற்படி விபரங்களை கருத்தில் கொண்டு இந்நகராட்சியில் குடிநீர் உபவிதிகள் (By-Law) தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

இந்த குடிநீர் உபவிதிகளின் முக்கியசரத்துக்கள் பின்வருமாறு.

</td>
<td>தீர்மான எண்:573<br>அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

Scanned with OKEN Scanner

**<u>கட்டணவிபரம்</u>**

| கட்டணவிபரம் | | வசூலிக்கப்பட்டு வரும் தொகை | தற்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை |
|---|---|---|---|
| அ) வைப்புத்தொகை | வீட்டு உபயோக இணைப்பு<br>வணிக பயன்பாடு இணைப்பு<br>தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு | ரூ.4000/–<br>ரூ.7000/–<br>ரூ.10000/– | ரூ.8000/–<br>ரூ.15000/–<br>ரூ.20000/– |
| ஆ)குடிநீர்கட்டணம் / மாதத்திற்கு | வீட்டு உபயோக இணைப்பு<br>வணிக பயன்பாடு இணைப்பு<br>தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு | ரூ.80/–<br>ரூ.305/–<br>ரூ.500/– | ரூ.300/–<br>ரூ.500/–<br>ரூ.1000/– |

மேற்படி, சீராய்வு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையினை வசூலிக்க அனுமதிகோரி தயாரிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக உபவிதிகள் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1387/2018/இ2)**

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.
2. மேலும், இதற்கான விளம்பரம் செலவினங்கள் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய உண்டாகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

30.06.2026 | **07**

துறையூர் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுப்புழு உற்பத்தி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. நகர்மன்ற தீர்மான எண். 510 நாள். 10.02.2026–ல் 01.01.2026 முதல் 31.3.2026 முடிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 549 நாள். 10.03.2026–ல் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ரூ.48.00 லட்சத்திற்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மேலும் சட்டமன்ற தேர்தல் 2026–ற்கான தேர்தல் நன்னடத்தை விதி 15.3.2026 முதல் 7.5.2026 முடிய அமுலில் இருந்த காரணத்தினால் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலவில்லை,மேலும் இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி மேற்கண்ட பணியினை மல்லிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் 30 எண்ணிக்கையலான களப்பணியாளர்களை கொண்டு, மேற்கண்ட டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு பணியினை அவசர அவசியத்தை கருதி இப் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 01.04.2026 முதல் 30.06.2026 முடிய மூன்று மாத காலத்திற்கு மல்லிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.11.85 லட்சம் ஆகும். மேற்கண்ட பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி மேற்கண்ட 30 பணியாளர்களை மல்லிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணியமர்த்தி கொள்ள மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1220/2022/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>"–**

டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு பணிக்கு மேற்கண்ட பணியாளர்கள் அவசியம் தேவைப்படுவதால் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை வருவாய் மூல தன நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மான எண்:574
அனுமதி வழங்கப்பட்டது

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 30.06.2026 | 08 | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வண்டி எண். TN48AT8614 வாகனத்திற்க 2026,27ம் ஆண்டிற்க சாலை வரி மற்றும் பசுமை வரி ரூ. 9884/-ம் மற்றும் காப்பீட்டுத் தொகை ரூ. 31544.- செலுத்த மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2587/2019/எச்1)<br>**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:575 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 09 | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வண்டி எண். TN48BU8799 வாகனத்திற்க 2026.27ம் ஆண்டிற்க சாலை வரி மற்றும் பசுமை வரி ரூ. 28000/-மற்றும் காப்பீட்டுத் தொகை ரூ.33960/-செலுத்த மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.2803/2023/இ1)**<br>**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:576 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 10 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண். 1436/2025/இ3/நாள். 18.02.2026ன் கடித்த்தில் நகராட்சிகளில் குப்பை எனது பொறுப்பு, மக்கும் குப்பை, மக்காத குப்பை பிளாஸ்டிக் ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு மழை நிர் சேகரிப்பு, வீட்டுக்கொரு கழிவறை வரி செலுத்துவது மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் திருவாளர் வெங்கடாசலபதி நாடசபா, 24பி, காமராஜர் தெரு, வண்ணிய தேனாம்பேட்டை சென்னை அவர்கள் மூலம் நடத்தி கொள்ள அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து 12.3.2026 அன்று அண்ணா பேருந்து நிலையம்,மற்றும் பாலக்கரை ஆகிய பகுதிகளில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றமைக்கு நிகழ்ச்சி ஒன்றிக்கு ரூ.7500/- வீதம் இரண்டு நிகழ்ச்சிகளுக்கு ரூ.15000/- திருவாளர் வெங்கடாசலபதி நாடசபா, 24பி, காமராஜர் தெரு, வண்ணிய தேனாம்பேட்டை சென்னை அவர்களுக்கு வழங்க மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 904/2026/எச்1)**<br>**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:577 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 11 | துறையூர் நகராட்சி வார்டுஎண்.18 சொரத்தூர் ரோட்டில் முதல் MCC வரை குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு புதிதாக பைப்லைன் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1039/2026/இ1)<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:578 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 12 | துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம்-திடக்கழிவு மேலாண்மை விதிகளின் செயல்பாடுகள் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு MOHUA துறையின் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்க நட்சத்திர அங்கீகாரம் (STAR RATING) வழங்கப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மையை பொருத்தவரையில் முதல் இறுதியாக்கம் சிறப்பாக கையாளப்பட்டும், இரண்டாம் நிலை சேகரிப்பு SECONDARY STORAGE TRANSPORTATION) முற்றிலும் தவிர்க்கப்பட்டு உள்ளது. ஆகவே, துறையூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (GARBAGE FREE CITY) மூன்று நட்சத்திர அந்தஸ்து பெற்றிட (THREE STAR RATING) சுய உறுதி மொழி சான்றிதழுக்க (SELF DECLARATION) நகர்மன்றம் அனுமதியளித்துள்ளதை தொடர்ந்து பொது மக்களின் ஆலோசனையினை 15 தினங்களுக்குள் தெரிவிக்க கோரி திருச்சிராப்பள்ளி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக அறிவிப்பு வழங்கியமைக்கு நாளிதழ் கட்டணம் ரூ. 11844/- தினபூமி நாளிதழுக்கு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1260/2017/எச்)<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:579 அனுமதி வழங்கப்பட்டது |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 30.06.2026 | 13 | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்பு/அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.இந்நகராட்சியில் அரசு பள்ளிகளான நகராட்சி நடுநிலைப்பள்ளி, அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, மற்றும் தனியார் பள்ளிகளான ஜெமீன்தார் நடுநிலைப்பள்ளி, எஸ்.பி.ஜி.நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் 456 மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர்.<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17404/2022/எம்1/நாள்.02.06.26 இந்நகராட்சியில் காலை உணவு திட்டம் 2.6.2023 முதல் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட காலை உணவு திட்டத்திற்கான மூன்றாண்டு காலம் 31.5.2026வுடன் முடிவடைவதால் மேற்கண்ட பணியினை புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணிவுத்திரவு வழங்கும் காலம் வரை . மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கவும், இடைப்பட்ட மூன்று மாதங்களுக்குள் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்த்தார்ரிடம் ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>ஆகவே, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றிக்கை கடித்த்தில் தெரிவிக்கப்பட்ட வாறு 1.6.2026 முதல் 31.8.2026 முடிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.889/2023/எச்1<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண்:580 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 14 | துறையூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை வெளிக் கொணர்வு முகமை (OUTSOURCING) ஒப்பந்த அடிப்படையில் இறுதியாக இந்நகர்மன்ற தீர்மானம் எண். 450 நாள். 12.08.2025–ல் 01.07.2025 முதல் 30.06.2026 முடிய நீட்டித்து வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகாலம் 30.06.2026–வுடன் முடிவடைகிறது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் Efile no.DMA/1196/2026/DT.2.06.2026–ன் கடிதத்தில் 01.07.2026 முதல் 31.08.2026 முடிய இரண்டு மாதங்களுக்க கால நீட்டிப்பு வழங்கிட ACTION TAKEN REPORT அனுப்பிட தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட கால நீட்டிப்பிற்கு அனுமதி வழங்க கோரப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட பணிக்கு 01.07.2026 முதல் 31.08.2026 முடிய இரண்டு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய இரண்டு மாத காலத்திற்கான மதிப்பீடு தொகை (Tender Rate 6110 x 13.81 tone = 84379.10 per day rate ) (84379 x 62 days = 5231498) அதாவது ரூ.53.00 இலட்சம் ஆகும் அதன்படி M/S VISION CARE PRIVATE LIMITED TRICHY நிறுவனத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.53.00 இலட்சம் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.4244/2018/எச்1<br>**அலுவலக குறிப்பு:–**<br>1. மேற்கண்ட பணிக்கு 01.07.2026 முதல் 31.08.2026 முடிய இரண்டு காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ய இரண்டு மாத்த்திற்கான மதிப்பீடு தொகை (Tender Rate 6110 x 13.81 tone = 84379.10 per day rate ) (84379 x 62 days = 5231498) அதாவது ரூ.53.00 இலட்சம் இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:581 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | 15 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 20390/2022/எச்1/நாள். 15.5.2025ல் 2023ம் ஆண்டு விலங்குகள் கருத்தடை விதிகளின்படி நகர அளவிலான குழு அமைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 1573/2025/அ6/நாள். 12.08.2025ல் விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு விதிகள் 2023ன்படி மாவட்டத்தில் செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு குழுவின் அலுவலர்கள் நியமனம் செய்து உத்திரவிடப்பட்டது. துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் சுற்றி திரியும் நாய்களை கணக்கீடு செய்யப்பட்டதில் ஆண், பெண் மொத்தம் 1117 நாய்கள் உள்ளதாக கண்டறியப்பட்டது. மேற்கண்ட 1117 எண்ணிக்கையிலான நாய்களில் 283 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அதே இடத்தில் கொண்டு சென்று விடப்பட்டன. மேலும் தற்போது நகராட்சியிலேயே மேற்கண்ட நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கூட்டமர்வில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகிணங்க, மேற்கண்ட நாய்களை பிடிக்க கீழ்க்கண்ட உபகரணங்களை வாங்க வேண்டியுள்ளது. | தீர்மான எண்:582 அனுமதி வழங்கப்பட்டது |

Scanned with OKEN Scanner

| வ.எண். | தேவைப்படும் உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Aluminium Frame | 5 |
| 2 | Net Material–Thick Spl Quality | 5 |
| 3 | Dog Mouth Guards–Thick Spl Quality | 10 |
| 4 | Dog Safety Hand Gloves–Thick Spl Quality | 10 |
| 5 | Cage for capturing and confining dogs | 10 |

மேற்கண்ட உபகரணங்களை தமிழ் நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் 107 முதல் தளம் என்.எஸ்.காம்ப்ளக்ஸ் 25எ சுந்தரதாஸ் டேங் தெரு திருச்சிராப்பள்ளி. நிறுவனத்தில் வாங்க மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(கோப்பு எண்.3933/2021/எச்1)**

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.06.2026 | **16** | துறையூர் நகராட்சியில் வருவாய் (ம) மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் (ம) வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி 2024–2025–ம் ஆண்டிற்கு தணிக்கை செய்வதற்கு ஆண்டு கணக்குகள் தயார் செய்தமைக்கு M.ஆர்த்தி என்ற நிறுவனத்திற்கு ரூ.49000/– வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 1437/2026/பி1)**<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:583 அனுமதி வழங்கப்பட்டது |
| 30.06.2026 | **17** | துறையூர் டவுன் வார்டு – A, பிளாக் – 3, T.S.No. 12/21, (Old Survey No. 75/2A(pt))ல் 16688.0 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து Roc.No.SWP/UQY52814/63247/2026/2026/TCP நாள்.20.05.2026ல் (இணையதள வழி ஒப்புதல்) தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால், குடிநீர் பகிர்மானக்குழாய் பதிக்கும் பணி மற்றும் தெருவிளக்கு வசதிக்காக மின்கம்பம் அமைத்திடும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதற்கு நகராட்சிப் பொறியாளர் சான்று வழங்கியுள்ளார். மனைப்பிரிவில் உள்ள சாலை உள்ளாட்சி பயன்பாடு மற்றும் மின்சார உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் தானபத்திரம் (ஆவண எண்.3544/08.05.2026) மூலம் நகராட்சி நகர்மன்றத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண்.797/2026/எப்1)**<br>**அலுவலகக்குறிப்பு:–**<br>1. அரசாணை (MS) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(1) துறை/ நாள். 09.12.2020–ல் பிரிவு 5(4)ன்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு தானமாக பெற்றுள்ளதற்கு மன்றம் அனு;மதி வழங்கலாம்.<br>2. அரசாணை (MS) எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(1) துறை/ நாள். 16.07.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி2, நாள். 20.10.2022–ன்படி அபிவிருத்தி பணிகள் செய்துள்ளதற்கு இந்நகராட்சி பொறியாளர் 25.06.2026–ம் தேதியில் வழங்கியுள்ள சான்றின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சியின் பராமரிப்பில் ஏற்றுக்கொள்ளலாம்.<br>3. மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br>4. காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். | தீர்மான எண்:584 அனுமதி வழங்கப்பட்டது |

**நகர்மன்றதலைவர்**
**துறையூர்நகராட்சி**

Scanned with OKEN Scanner